முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1357

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.06.2023, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
வாழுகின்ற வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 02 ம் நாள், 17.06.2023, சனிக்கிழமை)
வரமென அரங்கன் தர்மம்
வையகம் எங்கும் வலம் வர
3. வருகவே உலகில் ஞானவான்கள்
வல்லமைகொண்ட தர்மவான்கள் பெருகி
கலகம் பிற இடர் துன்பமின்றி
கலியுகம் காப்பாக சத்திய யுகமாகமாறி
4. மாறியே ஞானயுக மாற்றம்
மகான்கள் விரும்புகின்ற ஞான ஆட்சிக் காலமெல்லாம்
ஆறுமுக அரங்கன் அறத்தில் மூலமும்
அறம் நிறைந்த அரங்கன் தொண்டர்கள் மூலமும்
5. மூலமாக இனிதே உலகமாற்றம்
முழுமைகொண்ட ஞான உலகமாக மாற்றம் பெறும்
காலமதை வென்று கலியுக மக்களை
கண்டமிடரில் இருந்து காப்பதற்கு
6. தொண்டாற்றும் அரங்கன் சேவையே
தெய்வீக தன்மை நிறைந்த ஞானசேவையாகும்
உண்டான அரங்கன் திருவடிபற்றி உலகோர் சரணாகதி கொண்டால் போதும்
தண்டாயுதன் யான் இறங்கி அவர்கட்கெல்லாம் தக்கபடி ஞானிகளாகும் வாய்ப்பு

7. உண்டாக்கி இனிதே உலகில்
   உயர்வான ஞான சித்தர் காலத்தை
   உலகம் அடைய அதன்வழி பயனுற
   உயர்வாக ஆறுமுகன் யான் வழிகாட்டுவேன்
8. ஆகவே உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
   ஆற்றல்மிக்க அரங்கன் தவதர்மபலம் நோக்கி
   தயவாக இறங்கி வந்தால் போதும்
   தரணிக்கு பெருமாற்றம் சடுதி காணும்
9. காணவே ஞானமாய் மகாசக்தியாய்
   கந்தன் யான் அரங்கனுள் இருந்து சேவையாற்றுகின்றேன்
   உணர்ந்து தெளிந்து உலகோர்
   ஒன்றிணைந்து அரங்கனோடு கலந்தால் இந்த உலகமாற்றம் சடுதிகாணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–